02.02.2026

அ.வ.எண். 126/2019

வா.சா.1 – திரு. நிமலன் கிறிஸ்டோபர்(வட்ட சார் ஆய்வாளர்) , த/பெ.ஜார்ஜ் மனோகரன்,

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 02.02.2026 is accordance with the provision of Act X of 3331

<u>வா.சா.1 முதல் விசாரணை தொடர்ச்சி</u>

1. க.ச.எண்.153 காலை தொடர்பாக நெடுஞ்சாலைத்துறைக்கு கையகப்படுத்தப்பட்ட நில அளவு விவரம் தெரியுமா என்றால் அது சம்மந்தப்பட்ட ஆவணங்களை கொண்டு வரவில்லை என்றால் கொண்டு வந்துள்ளேன். க.ச.எண்.153/1B1, 1B2 காலைக்கு வடபுறமாக க.ச.எண்.153/1 காலையில் எவ்வளவு நிலம் கையகப்படுத்தப்பட்டது என்றால் க.ச.எண்.153/1B1, 1B2 உட்பிரிவானது வருவாய் கோட்டாட்சியரால் ரத்து செய்யப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும்போது இந்த வரைபடத்தின் படி தான் கையகப்படுத்தப்பட்டது என்றால் சரிதான். **புல எண்.153 க்கான புலப்படம் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி க.ச.எண்.153/1A இந்திய தேசிய நெடுஞ்சாலையாகும், அதற்காக 0.0530.0 ச.மீ(13 சென்ட்) ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. **நெடுஞ்சாலைத்துறையால் ஆர்ஜீதம் செய்யப்பட்டதற்கான RSR பதிவேடு உண்மை நகல் சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. க.ச.எண்.153/1B1, 1B2 காலைக்கு வடபுறமாக எவ்வளவு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என குறிப்பாக சொல்ல முடியாது என்றால் முடியாது. சா.சா.ஆ.1 வரைபடமானது வாதி மற்றும் பிரதிவாதிகளின் அனுபவத்தின் படி உள்ளது என்றால் அந்த அனுபவம் தவறானது என சொல்லி உட்பிரிவானது வருவாய் கோட்டாட்சியரால் ரத்து செய்யப்பட்டது. என்ன காரணங்களுக்காக வருவாய் கோட்டாட்சியரால் ரத்து செய்யப்பட்டது என எனக்கு தெரியாது என்றால் சரிதான். வரைபடத்தின் படி, வாதி மற்றும் பிரதிவாதிகளின் அனுபவம் தவறானது என நான் சொல்வது தவறு என்றும், அதற்கான காரணம் எனக்கு தெரியாது என்றால் காரணம் தெரியாது .

3. க.ச.எண்.153/4 காலையை நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்ட போது அளக்கவில்லை என்றால் அளந்தோம். க.ச.எண்.153/3 காலையின் அளவு அதிகமாக உள்ளது என்றால் நினைவில்லை. க.ச.எண்.153 காலையில் வடகிழக்கு மூலையில், க.ச.எண்.153 காலையின் உரிமையாளர் கணியூர் கிராம எல்லையை ஆக்கிரமித்து அளவு செய்யப்பட்டதால் நெடுஞ்சாலைத்துறை கையகப்படுத்தப்பட்ட பூமியின் அளவுகளில் வித்தியாசம் ஏற்பட்டுள்ளது என்றால் நெடுஞ்சாலைத்துறையால் அளந்து ஆர்ஜீதம் செய்யப்பட்டது, அதன் அளவுகள் அதிகமாக உள்ளதா அல்லது குறைவாக உள்ளதா என்பது பற்றி எனக்கு தெரியாது.

4. க.ச.எண்.153/1, 2, 3 காலையில் வடபுற எல்லையை ஒட்டி இருக்கும் உரிமையாளர் சுவாதீனம் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. க.ச.எண்.153/1 காலையில் மனுதாரரின் கிழபுற எல்லையை யார் அடையாளம் காட்டினார்கள் என்றால் அது வேலி அமைக்கப்பட்டுள்ளது. அனுபவப்படி உள்ள வரைபடமானது, கம்பிவேலி எல்லைக்குள் அமைந்துள்ளதா என்றால் ஆவணத்தின்படி எவ்வளவு என்று சரிபார்க்க வேண்டும். கம்பிவேலி அனுபவப்படி தான் என்னுடைய அனுபவ வரைபடம் அமைந்துள்ளதா என்றால் ஆமாம். கம்பிவேலியில் எல்லையை ஒட்டி 4 ம் வாதி சின்னம்மாள் வீடு, தென்னை மரம் உள்ளது என்றால் சரிதான். கம்பிவேலியை ஒட்டி மேல்புறம் வடபுறமாக 4 ம் வாதியின் வணிக கட்டிடங்கள் உள்ளது என்றால் சரிதான்.

5. க.ச.எண்.153 காலையில் கிழபுறமாக, கணியூர் கிராம எல்லைக்கல் இருந்ததா என்றால் இல்லை. க.ச.எண்.153 காலையில் வடபுற எல்லையானது, 99 மீ அதனை தொடர்ந்து 74 மீ ஆகும். அதில் நெடுஞ்சாலைத்துறைக்கு க.ச.எண்.153/1A, 2A, 3A1, 3B1, 3A3 காலைகளில் நிலம் ஆர்ஜீதம் செய்யப்பட்டுள்ளது. க.ச.எண்.153/1A ல் தென்புற பகுதி, 74 மீ அளவும், க.ச.எண்.153/2A ல் தென்புற பகுதி, 24.2 மீ, அளவும், க.ச.எண்.153/3A1, தென்புற பகுதி 60 மீ அளவும், க.ச.எண்.153/3B1 ல் தென்புற பகுதி 9.2 மீ அளவும், க.ச.எண்.153/3A3, ல் தென்புற பகுதி 10 மீ அளவு ஆகும்.க.ச.எண்.153/3A3, காலையில் கிழபுற எல்லையை அடையாளம் காட்டினார்களா என்றால் இல்லை.

6. கிழபுறத்தில் கிராம எல்லையானது தவறுதலாக உள்ளது என்றால் கணியூர் கிராம புலத்தை அளந்தால் சரியான அளவை தெரிந்துகொள்ளலாம். நான் எல்லைக்கற்கள் இல்லாமல் அளந்திருந்தால் அளவீடு முழுவதும் தவறானது என்றால் க.ச.எண்.153 ன் தென்புறபகுதியில் சர்வே கல் இருந்தது, வடபுற பகுதியில் நிலம் ஆர்ஜீதம் செய்யப்பட்டதால் சர்வே கல் இல்லை, சர்வே செய்தது சரியானது தான்.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur